# ஊணுறக்கமின்றி



ஊணுறக்கமின்றி மாதர்கலெல்லாம்,

வேணுகானத்தில் மயங்கியதேன் கண்ணா - உன்

வேணுகானத்தில் மயங்கியதேன் !

கச்சையணிந்திட மறந்தவளாய் ,

அலையகுலைய வந்தாளொருத்தி ;

லச்சையின்றி உன்முன்னே கண்ணா - அவள்,

நிலையை என்னவென்று கூறுவேன் !

ஊணுறக்கமின்றி.....

கண்ணுக்கு இடும் அஞ்சனத்தை ,

உதட்டில் பூசியே வந்தாளொருத்தி ;

கண்மயங்கச் செய்ததேன் கண்ணா - அவள்,

பதட்டத்தை நான் என்னவென்பேன் !

ஊணுறக்கமின்றி.....

இடையில் அணியும் நகைகளை,

கழுத்தில் அணிந்தே வந்தாளொருத்தி ;

நடைபயின்றிட உன்முன்னே கண்ணா - அதனை ,

எழுத்திலெப்படி நான் வடித்திடுவேன் !